மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் செடிகள் உற்பத்தி செய்யும் பணி

செய்தியாளர் பயணத்தின் போது கலெக்டர் ஆய்வு

கோயம்புத்தூர், செப்.28

கோயம்புத்தூர் மாவட்டம், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், வாரப்பட்டி ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், நர்சரி பண்ணையில், வேம்பு, புளி, நாவல் ஆகிய செடிகள் உற்பத்தி செய்யும் பணிகள் மற்றும் அதன் செயல்பாடுகளை மாவட்ட கலெக்டர் பவன்குமார் க. கிரியப்பனவர் தலைமையில் செய்தியாளர் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வுகளின்போது, சுல்தான்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவகாமி, சிக்கந்தர்பாஷா, உதவி பொறியாளர் கனகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இச்செய்தியாளர் பயணத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது, நாற்றங்கால் பண்ணை என்பது பயிர்களின் நாற்றுகளை உற்பத்தி செய்து, நடவுக்குத் தயார்படுத்தும் இடமாகும். நாற்றங்கால் பண்ணையின் முக்கிய பயன்கள், ஆரோக்கியமான நாற்றுகளை உற்பத்தி செய்தல், நில பயன்பாட்டை அதிகரித்தல் மற்றும் இடர் மேலாண்மையை எளிதாக்குதல் ஆகும்.

நாற்றங்கால்பண்ணைகளில், நாற்றுகள் சரியான முறையில் பராமரிக்கப்படுவதால், அவை ஆரோக்கியமாகவும், வளரப்படுகின்றன. நாற்றங்கால் பண்ணை, இயற்கையான சூழலை பேணவும் உதவுகிறது. மேலும்

சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் முடிகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் உள்ள 12 வட்டாரங்களில் ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களுக்கு வட்டாரத்திற்கு மாதம் தலா 10,000 நாற்றுகள் உற்பத்தி செய்ய அறிவுரைகள் பெறப்பட்டது.

அதன்படி ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதத்திற்கு 24 நர்சரிகளில் 10,000 நாற்றுகள் வீதம் 2,40,000 நாற்றுகள் உற்பத்தி செய்ய அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதனால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 3,60,000 மரக்கன்றுகள் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மரக்கன்றுகள் 6 அடி உயரம் வரை வளர்க்கப்பட்டு, பின் நர்சரி பண்ணையில், வேம்பு, புளி, நாவல், கொய்யா, நெல்லிக்காய், மாங்கனி ஆகிய பெருமளவு மரக்கன்றுகள் நடுதல், சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடுதல், ஆற்றங்கரையில் மரக்கன்றுகள் நடுதல், அரசு அலுவலகங்களில் மரக்கன்றுகள் நடுதல், கலைஞர் கனவு இல்லம் வீடுகளில் மரக்கன்றுகள் நடுதல் மற்றும் கல்வி நிறுவனங்களில் மரக்கன்றுகள் நடுதல் போன்ற பணிகளுக்கு நடவு செய்ய பயன்படுத்தப்படும். என மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பல்வேறு வகையான கடனுதவிகள்: கலெக்டர் வழங்கினார்

சிவகங்கை, செப்.28

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட கலெக்டர் கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர், விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள்.

சிவகங்கை மாவட்டத்தில் நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், கண்மாய்களை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளவும், கண்மாய்க்கு செல்லும் ஊரணிகளை வெட்டு மராமத்து செய்திடவும், கண்மாய் பகுதிகளில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரங்களை அகற்றிடவும், இலவசமின்இணைப்புகள் வழங்கிடவும், தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திட வேண்டும்,

அதனைத்தொடர்ந்து, வேளாண்மை துறையின் சார்பில் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் விளக்ககையேட்டினை, மாவட்ட கலெக்டர் வெளியிட்டார். மேலும், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர். பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்த வடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும் படியும் மாவட்ட கலெக்டர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். 3

இக்கூட்டத்தில், கூட்டுறவுத்துறையின் சார்பில் கத்தப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 12 விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்பு கடனுதவிக்கான ஆணைகளையும், 1 விவசாயிக்கு மரவள்ளி பயிர் கடனுதவிக்கான ஆணைகளையும், 1 விவசாயிக்கு கரும்பு பயிர் கடனுதவிக்கான ஆணைகளையும், மற்றும் திருக்கோஷ்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 1 விவசாயிக்கு தென்னை பராமரிப்புக் கடனுதவிக்கான ஆணைகளையும் என ஆக மொத்தம் 15 பயனாளிகளுக்கு ரூபாய் 11,02,600/ மதிப்பீட்டில் பல்வேறு வகையான கடனுதவிக்கான ஆணைகளை மாவட்ட கலெக்டர் பொற்கொடி, வழங்கினார்.

முன்னதாக, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தினை முன்னிட்டு, துறை ரீதியாக அமைக்கப்பட்டிருந்த செயல் விளக்க கண்காட்சியினை மாவட்ட கலெக்டர் பார்வையிட்டார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி , இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) சு.சுந்தரமகாலிங்கம், மேலாண்மைஇயக்குநர்(மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி) திருமதி உமா மகேஸ்வரி, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் ஜெஃபி கிரேசியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தனலெட்சுமி உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படிவம் ஏ
பொது அறிவிப்பு
(இந்திய திவால்நிலை மற்றும் திவால்நிலை வாரியத்தின் (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால்நிலை தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016 இன் விதிமுறை 6 இன் கீழ்)

கடன் வழங்குபவர்களின் கவனத்திற்கு
எம்/எஸ். குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் (சிஐஆர்பி இல்)

தொடர்புடைய விவரங்கள்

1.	கார்ப்பரேட் கடனாளியின் பெயர்	எம்/எஸ். குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்
2.	நிறுவனக் கடனாளி இணைக்கப்பட்ட தேதி	09/05/1961
3.	நிறுவனக் கடனாளி எந்த அதிகாரத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளார்/பதிவு செய்யப்பட்டுள்ளா	நிறுவனங்களின் பதிவாளர், கொல்கத்தா
4.	பெருநிறுவன கடனாளியின் பெருநிறுவன அடையாள எண்	U31300WB1961PLC025104
5.	நிறுவன கடனாளியின் பதிவு அலுவலகம் மற்றும் முதன்மை அலுவலகத்தின் முகவரி (ஏதேனும் இருந்தால்)	பதிவு அலுவலக முகவரி: இஎன்–62, செக்டர்–V 7–வது தளம், சால்ட் லேக் சிட்டி, கொல்கத்தா, மேற்கு வங்காளம், இந்தியா, 700091 கணக்குப் புத்தகங்கள் பராமரிக்கப்படும் முகவரி: கட்டாக்–பூரி சாலை புத்தேஸ்வரி கோயிலுக்கு எதிரே, புவனேஸ்வர், ஒரிசா, இந்தியா, 751006.
6.	நிறுவன கடனாளியைப் பொறுத்தவரை திவால்நிலை தொடக்க தேதி	26.09.2025 (ஆர்டர் 27.09.2025 அன்று பதிவேற்றப்பட்டது)
7.	திவால்நிலை தீர்வு செயல்முறையின் மதிப்பிடப்பட்ட முடல் தேதி	25.03.2026
8.	இடைக்காலத் தீர்வு நிபுணராகச் செயல்படும் திவால்நிலை நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண் விவரக்குறிப்புகள்	பிரதீப் குமார் கப்ரா IBBI/IPA–001/IP–P01104/2017–18/11790
9.	இடைக்காலத் தீர்வு நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல், வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.	பிரதீப் குமார் கப்ரா சி/905, ஒஃபிரா பில்டிங் வி.ஐ.பி சாலை, பர்தானா, லேக், ரூர்த், குஜராத். 395007 மின்னஞ்சல்: – ippradeepkabra@gmail.com
10.	இடைக்காலத் தீர்மான நிபுணருடன் கடிதப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி.	பிரதீப் குமார் கப்ரா, 301, 3–வது தளம், ரீகல் வணிக மையம், மெர்சிடிஸ் ஷோ ரூமுக்கு மேலே, நியூ சிட்டி லைட் ரோடு, பர்தானா, லேக், ரூர்த், குஜராத்–395007. மின்னஞ்சல்: ip.guptapower@gmail.com
11.	உரிமைகோரல்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	வெள்ளிக்கிழமை, 10.10.2025
12.	இடைக்காலத் தீர்மான நிபுணரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரிவு 21 இன் துணைப்பிரிவு (6A) இன் பிரிவு (ந) இன் கீழ், கடன் வழங்குநர்களின் வகைகள் ஏதேனும் இருந்தால்.	பொருந்தாது
13.	கடன் வழங்குநர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளாகச் செயல்பட அடையாளம் காணப்பட்ட திவால்நிலை நிபுணர்களின் பெயர்கள் ஒரு வகுப்பில் (ஒவ்வொரு வகுப்பிற்கும் மூன்று பெயர்கள்)	பொருந்தாது
14.	(அ) தொடர்புடைய படிவங்கள் மற்றும் (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் விவரங்கள் இங்கே கிடைக்கின்றன:	அ) இணைய இணைப்பு: https://ibbi.gov.in/home/downloads b) பொருந்தாது

எம்/எஸ். குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டின் பெருநிறுவன திவால்நிலை தீர்வு செயல்முறையைத் தொடங்க தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளதாக செப்டம்பர் 26, 2025 அன்று இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டது (ஆணை 27.09.2025 அன்று பதிவேற்றப்பட்டது)
எம்/எஸ்.குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டின் கடன் வழங்குநர்கள், தங்கள் உரிமைகோரல்களை ஆதாரங்களுடன், 2025 அக்டோபர் 10 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அல்லது அதற்கு முன்னர், பதிவு எண். 10க்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இடைக்காலத்தீர்மானநிபுணரிடம்சமர்ப்பிக்குமாறுஇதன்மூலம்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நிதிக் கடன் வழங்குபவர்கள் தங்கள் உரிமைகோரல்களை மின்னணு முறையில் மட்டுமே ஆதாரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்குநர்களும் நேரில், தபால் அல்லது மின்னணு முறையில் ஆதாரத்துடன் உரிமைகோரல்களைச் சமர்ப்பிக்கலாம்.
தவறான அல்லது தவறான கோரிக்கை ஆதாரங்களை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.
எஸ்டி/–
சி.எ. ஐபி பிரதீப் குமார் கப்ரா
ஐஆர்பி. எம்/எஸ்.க்கான குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்
தேதி: 28.09.2025 ஐபிபிஐ பதிவு எண்: IBBI/IPA–001/IP–P01104/2017–18/11790

மாநில அளவிலான ஆராய்ச்சி தினம் 2025

ஈரோடு, செப்.28

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழக 2025ம் ஆண்டிற்கான ஆராய்ச்சி தினம் 26.09.2025 (வெள்ளிக்கிழமை) அன்று பல்கலைகழகத்தில் கொண்டாடப்பட்டது.

இதில் ஈரோடு, வேளாளர் மருந்தியல் கல்லூரியை இந்த வருடத்திற்கான மிகவும் நம்பிக்கைக்குரிய நிறுவனமாக மாநிலத்தின் முதலிடத்தை தமிழ்நாடு மருத்துவ சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சர் மா. சுப்பிரமணியன் மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழக துணை வேந்தர் முனைவர் நாராயணசாமி கல்லூரி முதல்வர் முனைவர் அ. சரவணகுமார் அவர்களிடம் வழங்கப்பட்டது.

இதற்கு கல்லூரி நிர்வாகம் அனைத்து ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களை மனதார பாராட்டினர். மேலும் இவ்விழாவில் கல்லூரி மேலாளர் விக்னேஷ்வரன் அவர்களும் கலந்து கொண்டார். மேலும் இவ்விருதினை கல்லூரி முதல்வர் முனைவர் சரவணகுமார் அவர்கள் தாளாளர் சந்திரசேகர் அவர்களிடம் கொடுத்து வாழ்த்துக்கள் பெற்றார்.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பழனி
இ.ப.வ.57/2025
M பொன்னுச்சாமி
த/பெ.மாரிமுத்து
அத்தி மரத்துப்பட்டி
ராஜாம்பட்டி கிராமம்
பழனி வட்டம்
–மனுதாரர்
எதிராக
வருவாய்கோட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பழனி
–எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்காணும் எண் வழக்கில் மனுதாரரின் தாத்தா பழனிச்சாமி என்பவர்கடந்த என்பவர் 15–01–1980ஆம் தேதி அன்று , பழனி, அத்தி மரத்துப்பட்டி ராஜாம்பட்டி கிராமம் என்ற இடத்தில் இறந்ததை உட்கோட்ட நிர்வாக நடுவர் (பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நீதிமன்றத்தில் பதிவு செய்ய வேண்டிய மனுதக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் (பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளவேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைப்பட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்என்பதை அறியவும்
பொன்னுச்சாமி
பழனி, மனுதாரர்

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பழனி
சி.ப.128/25/ஆ3
செல்வநாயகம்
க/பெ. குமரவேல்
2/1 நடுத்தெரு
அத்தி மரத்து வலசு
ராஜம்பட்டி கிராமம், பழனி
–மனுதாரர்
எதிராக
வருவாய் கோட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பழனி
–எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்காணும் எண் வழக்கில் மனுதாரரின் சகோதரர் சிவராசு என்பவர் கடந்த 6.08.2000–ஆம் தேதி அன்று , பழனி, 2/1 நடுத்தெருவு அத்தி மரத்து வலசு ராஜாம் பட்டி பழனி என்ற இடத்தில் இறந்ததை உட்கோட்ட நிர்வாக நடுவர் (பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நீதிமன்றத்தில் பதிவு செய்ய வேண்டிய மனுதக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் (பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளவேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைப்பட்சமாகபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்
செல்வநாயகம்
பழனி, மனுதாரர்

தமிழகம் முழுவதும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை துவக்கி வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் நிகழ்வின் ஒரு பகுதியாக கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி 7வது வார்டு ரங்கநாதபுரத்தில் புதிதாக கட்டப்பட்ட நூலக கட்டடத்தையும் திறந்து வைத்தார். நிகழ்வில் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் வெ. விஷ்வபிரகாஷ், மாவட்ட நூலக அலுவலர் ராஜேந்திரன், கவுன்சிலர் செல்வி. சௌந்தர்யா விஜயகுமார் மற்றும் பேரூராட்சி கவுன்சிலர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்தனர்.

கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் என்எஸ்எஸ் தினம்

ஸ்ரீவில்லிபுத்தூர், செப்.28

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலையில், தேசிய சேவை திட்டம் (என்எஸ்எஸ்) சார்பில் என்எஸ்எஸ்தினம் 2025 அனைவரையும் உயர்த்தி, புறக்கணிக்கப்பட்ட சமூகத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வரவேண்டும் “என்ற தலைப்பில் வேந்தர் முனைவர் கே. ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது.”கல்வியுடன் சேவை மனப்பாங்கும் வளர வேண்டும்“ என வேந்தர் தலைமை உரையில் வலியுறுத்தினர் 360 க்கும் மேற்பட்ட மாணவர் தன்னார்வலர்கள் விழாவில் கலந்து கொண்டு மனிதாபிமானத்துடன் வாழ்வோம் என்ற உறுதிமொழி எடுத்தனர்.

சிறப்பு விருந்தினர் “ராஜேஷ் உதவும் கரங்கள்” அறக்கட்டளை நிறுவனர் மற்றும் முன்னாள் விஏஓ துரை பிரித்விராஜ் கலந்து கொண்டு

“சமூக சேவைக்காக இளைஞர்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்“ என்ற கருத்தை வலியுறுத்தினார்.

விழாவில் மாணவர் நல இயக்குநர் முனைவர் எஸ். பி. பாலகண்ணன், விவாதம், கட்டுரை எழுதுதல், வினாடி வினா, மல்டி மீடியா பிரசண்டேஷன் மற்றும் போஸ்டர் தயாரித்தல் போன்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ், ரொக்க பரிசுகளை வழங்கினார். ஒருங்கிணைப்பாளர் டி. ராஜ்பிரதீஷ் விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

ஆசிய துப்பாக்கிசுடும் போட்டியில் பதக்கம் வென்ற வீராங்கனைக்கு பாராட்டு

சிவகங்கை, செப்.28

கடந்த 72 ஆண்டுகளில் முதல்முறையாக ஆசிய துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய அணியின் வீராங்கனையும் தனி நபர் பிரிவில் வெண்கலம் வென்றவருமான அந்த்ரா ராஜ்சேகருக்கு சிவகங்கை நகர் மக்கள் சார்பில் புதன்கிழமை பாராட்டு விழா நடத்தப்பட்டது.

அண்மையில்ல் கஜகஸ்தானில் நடைபெற்ற 2025 ஆண்டின் ஆசிய துப்பாக்கி சுடும் போட்டியில் சென்னை ரைபில் கிளப் உறுப்பினர் அந்த்ரா ராஜ்சேகர்(17) இந்திய அணியின் உறுப்பினராககலந்துகொண்டு குழுப்பிரிவில் தங்கப் பதக்கத்தையும் தனிப் பிரிவில் வெங்கலப் பதக்கத்தையும் வென்று சாதனை படைத்தார்.

கடந்த 72 ஆண்டுகளில் முதல் முறையாக ஆசிய அளவிலான துப்பாக்கி சுடும் போட்டியில் பதக்கம் பெற்ற முதல் சென்னை ரைபிள் கிளப் உறுப்பினர் என்ற பெருமையையும் பெற்ற இவர் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி இரா.கற்பூரசுந்தர பாண்டியனின் பெயர்த்தியும், சிவகங்கை கே.ஆர். மேனிலைப் பள்ளி செயலாளர் மற்றும் சென்னை ரைபிள் கிளப் செயலாளர் க.ராஜ்சேகரின் மகளுமாவார்.

இவரைப் பாராட்டி சிவகங்கையிலுள்ள தனியார் அரங்கில் கடந்த (24.09.25) அன்று பாராட்டு விழா நடத்தப்பட்டது.

இதில், சிவகங்கை நகர் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு அந்த்ரா ராஜ்சேகரை வாழ்த்திப் பாராட்டி பரிசளித்தனர். நிறைவில் அந்த்ரா ராஜ்சேகர் ஏற்புரையாற்றினார். முன்னதாக கே.ஆர். பள்ளி தலைமையாசிரியர் தெ.சரவணன் வரவேற்றார். ஆசிரியர் ரவி தொகுத்தளித்தார். தமிழாசிரியர் நீ. இளங்கோ நன்றி கூறினார், இதில் கே.ஆர். கே.ஆர்.மேனிலைப்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் விளையாட்டு ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.